**Copy of Deposition**

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 130/2022**
**Prosecution Witness**:1

| | | | |
|---|---|---|---|
| Name | ஆறுமுகம் (PW1) | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 14th d**ay of August 2025** by P.Arulkumar, Magistrate Clerk, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused present.)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது சிவகிரி விளக்கேத்தியில் குடியிருந்து கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். வெண்ணிலா எனது மனைவி. சாட்சி பரமேஷ்வரன் எனது மகன் ஆவார். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் வேலைக்கு சென்றிந்தபோது எனது மகனும், மனைவி வெண்ணிலாவும் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருநதபோது அவர்களுக்கு விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார்கள். அதன் பேரில் நான் ஈரோடு அரசு தலைமை மருத்துவமனைக்கு சென்று எனது மகனையும், மனைவியையும் பார்த்தேன். எனது மனைவிக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. எனது மகன் மற்றும் மனைவி மீது ஒரு இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக தெரிந்துகொண்டேன். எனது மனைவி வெண்ணிலாவை மேல்சிகிச்சைக்கா சேலம் மோகன் குமாரமங்களம் அரசு மருத்துவமனையில் கொண்டுசேர்த்தேன். நான் மருத்துவமனையில் இருந்த போது சிவகிரி போலீசார் மருத்துவமனைக்கு வந்து என்னிடம் புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். அந்த புகார் வாக்குமூலத்தில் காணப்படும் இடது கை பெருவிரல் ரேகை என்னுடையதுதான். அந்த புகார் வாக்குமூலம் அரசு தரப்பு சான்று ஆவணமாக குறியீடு செய்ய கோரப்பட்டது. **(புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** சுமார் 4 நாட்கள் கழித்து சேலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த எனது மனைவி வெண்ணிலா இறந்துவிட்டார். சிவகிரி போலீசார் சேலம் மோகன்குமாரமங்களம்அரசு மருத்துவமனைக்கு வந்து எனது மனைவி

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.08.14 07:44:28 +0530

வெண்ணிலாவின் பிரேதத்தை பார்வையிட்டு விசாரித்தார்கள். போலீசார் என்னையும் விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :-**

எனது மகன் பரமேஷ்வரன் ஓட்டிச்சென்ற TVS XL இருசக்கர வாகனம் எனக்கு சொந்தமானது என்றால் சரிதான். சம்பவம் நடக்கும் போது பரமேஷ்வரன் என்பவருக்கு வயது 10 இருக்கும் என்றால் சரிதான். மேற்படி வண்டியை எனது மைனர் மகன் ஓட்டியதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு காரணமே எனது மகனின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதைதான் என்றால் சரியல்ல. நஷ்டஈடு பெற வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதிக நஷ்டஈடு பெற வேண்டி பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:- இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN

Digitally signed by PANDIARAJAN
Date: 2025.08.14 07:44:36 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 130/2022**
**Prosecution Witness**:2

| Name | பரமேஷ்வரன் (PW2) | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 14th d**ay of August 2025** by P.Arulkumar, Magistrate Clerk, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused present.)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது சிவகிரி விளக்கேத்தியில் குடியிருந்து கொண்டு கல்லூரியில் படித்து முடித்துவிட்டு தற்போது தேர்வு முடிவுக்காக காத்துக்கொண்டுள்ளேன். அ.சா.1 ஆறுமுகம் எனது அப்பா. வெண்ணிலா எனது அம்மா ஆவார். ஆஜரில் உள்ள எதிரியை எனக்கு தெரியும். ஆஜர் எதிரி தான் நாங்கள் கோவிலுக்கு சென்று கொண்டிருந்தபோது எங்கள் மீது Yamaha பைக்கை மோதி விபத்தை ஏற்படுத்தியவர் ஆவார். கடந்த 24.10.2021ம் தேதி TVS XL Super இருசக்கர வாகனத்தில் நானும் எனது அம்மா வெண்ணிலாவும் மகா காளியம்மன் கோவிலுக்கு சென்றோம். நான் தான் அந்த இருசக்கர வாகனத்தை ஓட்டிக்கொண்டுசென்றேன். எனது அம்மா வெண்ணிலா எனக்கு பின்னால் அமர்ந்து வந்தார். அன்று மதியம் சுமார் 03.30 மணியளவில் முத்தூர் - சிவகிரி ரோட்டில் எல்லைகாளியம்மன் ரோட்டிற்கு எதிர்புறத்தில் ரோட்டை கடந்து செல்வதற்காக நின்றுகொண்டிருந்தேன். மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி முத்தூர் ரோட்டில் ஆஜர் எதிரி அர்ஜுனன் ஒரு Yamaha வண்டியில் வேகமாகவும், கவனகுறைவாகவும் வந்து எங்கள் மீது மோதிவிட்டார். அந்த Yamaha வண்டியின் எண். TN 86 C 9856 ஆகும்.

2. எனக்கு கை, கால்களில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டது. எனது அம்மா வெண்ணிலாவிற்கு தலையில் ரத்த காயம்ஏற்பட்டது. விபத்தை அங்கிருந்த தங்கவேல் மற்றும் சில நபர்களும் பார்த்தார்கள். சம்பவ இடத்தில் இருந்தவர்கள் எனது அப்பா அ.சா.1ஆறுமுகத்திற்கு போன் மூலம் விபத்து பற்றி தகவல் சொன்னார்கள். பின்னர் 108

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.08.14 07:44:44 +0530

ஆம்புலன்ஸ் மூலம் நானும் எனது அப்பா, அம்மாவுடன் சிவகிரி அரசு மருத்துவமனைக்கு சென்றோம். எனக்கு சிராய்ப்பு காயங்கள் இருந்ததால்நான் சிகிச்சையில் சேரவில்லை. எனது அம்மா வெண்ணிலாவிற்கு முதலுதவி சிகிச்சை முடித்து மேல்சிகிச்சைக்காக ஈரோடு அரசு தலைமை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். மேலும் எனது அம்மா வெண்ணிலாவை சேலம் மோகன் குமாரமங்களம் அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக மருத்துவர்கள் அனுப்பிவைத்தார்கள். சேலம் மோகன் குமாரமங்களம் அரசு மருத்துவமனையில் நான்கு நாட்கள் கழித்து எனது அம்மா வெண்ணிலா இறந்துவிட்டார். விபத்து பற்றி எனது அப்பா ஆறுமுகம் மருத்துவமனையில் புகார் வாக்குமூலம் கொடுத்தார். போலீசார் எனது அம்மா வெண்ணிலாவின் பிரேதத்தை பார்வையிட்டு விசாரித்தார்கள். என்னையும் போலீசார் விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :-**

சம்பவ சமயத்தில் எனக்கு ஓட்டுநர் உரிமம் இருந்ததா என்றால் இல்லை. சம்பவம் நடந்த இடம் போக்குவரத்து அதிகம் உள்ள ரோடு என்றால் ஓரளவு இருக்கும். சம்பவம் நடந்த இடத்திற்கு அருகில் இண்டியன் ஆயில் பெட்ரோல் பங்க் வலது புறமும், வலசுமணி லேத் ஒர்க்ஸ் இடதுபுறமும் உள்ளது என்றால் சரிதான். வழக்கு சம்பவம் என்னுடைய கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் தான் நடைபெற்றது என்றால் சரியல்ல. ரோட்டில் வரும் வாகனங்களை சரிவர கவனிக்காமல் திரும்பியதால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு இருசக்கர வாகனங்கள் சரியாக ஓட்டத்தெரியாது என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு எதிரியின் கவனக்குறைவோ, அஜாக்கிரதையோ காரணம் அல்ல என்று சொன்னால் சரியல்ல. எதிரி முத்தூர் - சிவகிரி ரோட்டில் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி ரோட்டின் இடது புற ஓரமாக எதிரி அவருடைய இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்தார் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:- இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN
Digitally signed by PANDIARAJAN
Date: 2025.08.14 07:44:52 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 130/2022**
**Prosecution Witness**:3

| | | | |
|---|---|---|---|
| Name | தங்கவேல் (PW3) | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 14th d**ay of August 2025** by P.Arulkumar, Magistrate Clerk, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused present.)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது சிவகிரியில் குடியிருந்து கொண்டு பவர்லூம் தறி வைத்துள்ளேன். ஆஜரில் உள்ள எதிரியை எனக்கு தெரியும். அவர்தான் விபத்தை ஏற்படுத்தினார். 24.10.2021ம்தேதியன்று மதியம் 03.30 மணியளவில் எல்லை மகாகாளியம்மன் கோவில் அருகில் உள்ள எனது வீட்டில் இருந்தேன். ஒரு XL இருசக்கர வாகனத்தில் அ.சா.2 பரமேஷ்வரனும், அவரது அம்மாவும் முத்தூர் போகும் ரோட்டில் கிழக்கு நோக்கி வந்தார்கள். ஆஜர் எதிரி ஒரு Yamaha வாகனத்தை கிழக்கு நோக்கி ஓட்டிவந்து மேற்சொன்ன பரமேஷ்வரன் மற்றும் அவரது அம்மா மீது மோதிவிட்டார். பரமேஷ்வரனுக்கு சிராய்ப்பு காயம் இருந்தது. அவரது அம்மாவிற்று தலையில் அடிபட்டிருந்தது. நான் அடிபட்ட அந்த அம்மாவிற்று தண்ணீர் கொடுத்து அவரது கணவருக்கு போன் மூலம் விபத்து பற்றி தகவல் சொன்னேன். சம்பவத்தை நானும் அருகில் இருந்த மற்ற நபர்களும் பார்த்தோம். 108 ஆம்புலன்ஸ் மூலமாக அடிபட்ட அந்த அம்மாவையும், பரமேஷ்வரனையும் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். போலீசார் சம்பவ இடம் வந்து பார்வையிட்டு விசாரித்தார்கள். என்னையும் போலீசார் விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :-**

நான் குடியிருப்பது ஜீவா தெரு என்றால் சரிதான். வழக்கு சம்பவம் நடந்த ரோடு முத்தூர் - சிவகிரி மெயின் ரோடு என்றால் சரிதான். மேற்படி ரோட்டில் எப்போதும் போக்குவரத்து அதிகம் என்றால் சரிதான், விபத்தும் அடிக்கடி ஏற்படும். அந்த இடத்தில்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.08.14 07:45:02 +0530

மெயின்ரோட்டை கடக்க இருபுறமும் கவனித்துதான் கடக்கவேண்டும் என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்திற்கு தெற்கு பகுதியில் வலசுமணி லேத்தும், இண்டியன் ஆயில் பங்கும், மற்ற கடைகளும் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்திற்கு வடபுறத்தில் வீடுகள், கடைகள் உள்ளது என்றால் சரிதான். சத்தம் கேட்டு தான் நான் சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றால் இல்லை அங்கு தான் நின்று கொண்டிருந்தேன். விபத்தில் இறந்தவரும், அவரது மகனும் கோவிலுக்கு செல்வதற்காக ரோட்டை கடக்க திரும்பினார்கள் என்றால் சரிதான். அப்போது தான் வழக்கு சம்பவம் நடைபெற்றது என்றால் சரிதான். வலசுமணி லேத்து, இண்டியன் ஆயில் பங்கு மற்றும் கோவில் ஆகிய இடங்களில் கண்காணிப்பு கேமரா உள்ளது என்றால் சரிதான். போலீசார் சம்பவ இடத்திற்கு எப்போது வந்தார்கள் என்றால் தெரியவில்லை, என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் போலீசார் என்னை விசாரிக்கவில்லை. நான் சம்பவ இடத்தில் இருந்ததாகவும், சம்பவத்தை நேரில் பார்த்தாகவும் சொன்னால் சரியல்ல. இந்த விபத்து அ.சா.2ன் கவனக்குறைவால் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அ.சா.1 கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:- இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN

Digitally signed by PANDIARAJAN
Date: 2025.08.14 07:45:08 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 130/2022**
**Prosecution Witness**:4

| Name | சூர்யபிரகாஷ் (PW4) | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 14th d**ay of August 2025** by P.Arulkumar, Magistrate Clerk, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused present.)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது சிவகிரி, ஜீவா தெருவில் குடியிருந்து கொண்டு பவர்லூம் தறி வைத்துள்ளேன். அ.சா.3 தங்கவேல் எனது அப்பா ஆவார். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் பார்வைமகஜரில் முதலாவதாக காணப்படும் கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 26.10.2021ம் தேதியன்று ஒரு விபத்து வழக்கு சம்பந்தமாக காலை 07.00 மணியளவில் சிவகிரி காவல்நிலைய உதவி ஆய்வாளர் விபத்து நடந்த எல்லை மகாகாளியம்மன் கோவில் அருகில் வந்து விபத்து நடந்த இடத்தை பார்வையிட்டு வரைபடம் போட்டு எழுதிகொண்டார்கள். அவர் எழுதிகொண்ட அந்த பார்வைமகஜரில் நானும் பழனிச்சாமி என்பவரும் கையொப்பம் செய்தோம். அந்த **பார்வைமகஜர் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.** போலீசார் என்னையும் விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :-**

இறந்து போன வெண்ணிலா எனக்கு என்ன உறவு முறை என்றால் உறவு முறை இல்லை. போலீசார் சம்பவ இடத்தில் வரைபடம் வரையும் போது எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் 2 பேர் இருந்தார்கள். விபத்தில் அடிபட்ட இரண்டு வாகனங்கள் வரைபடம் வரையும் போது அங்கு இருந்ததா என்றால் இல்லை. வழக்கு சம்பவம் குறித்து கோவில், பெட்ரோல் பங்க், லேத் ஆகிய இடங்களில் உள்ள கண்காணிப்பு கேமராக்களை போலீசார் ஆய்வு செய்தார்களா என்றால் அதுபற்றி தெரியாது. நான் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் வைத்து இந்த கையொப்பம் போடவில்லை என்றாலும், பின்னிட்டு

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.08.14 07:45:16 +0530

காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்த தாளில் கையொப்பம் செய்தேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை:- இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.08.14 07:45:26 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்

நீதித்துறை நடுவர், கொடுமுடி.